**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

<table>
<tr><td colspan="4">2024–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12–ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு 1 –ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>கருப்புசாமி</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**12.8.2024 OS.No. 12/2024 வா.சா. 1 கருப்புசாமி ஆஜர்**

**முதல் விசாரணை:**

1. நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1–ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

2. கடந்த 11.04.2021–ம் தேதி என் அப்பா எனக்கு எழுதிவைத்த பதிவு இனாம்செட்டில்மெண்டு அசல் தாக்கல் செய்கிறேன். **(இனாம்செட்டில்மெண்டு அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 24.05.2023–ம் தேதியிட்ட கணினி பட்டா எண்.2567இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(கணினி பட்டா எண்.2567இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 15.11.2023–ம் தேதியிட்டு 1431 முதல் 1433 பசலிகளுக்கு வாதி செலுத்திய தீர்வை அசல் தாக்கல் செய்கிறேன். **(1431 முதல் 1433 பசலிகளுக்கு வாதி செலுத்திய தீர்வை அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி வா.சா.ஆ.3 ஆவணம் குறியீடு செய்ய பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது. பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.